HAPPY NEW YEAR 2015

சுவிசேஷம் அறிவிக்க வாருங்கள்



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10 th Jan. 2015

*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

**To**

If Undelivered Kindly Return to

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan

தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 15 | ஜனவரி 2015 | கனி 2



## சமாரியன்
## Samaritans

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" - கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradhana TV:**
Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 p.m **on Rakshana TV:**
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.15 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Sunday 10.00-10.30 p.m and Monday 7.00-7.15 a.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on ShubhSandesh Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*


**THE WORD OF CHRIST**
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**


ஆசிரியருரை
ஜெ.சி.சோட் அவர்களின் செய்தி
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ் அவர்களின் வேதபாடம்,
கர்த்தருடைய ஊழியர்களாகிய
சகோ.கனகராஜ்,
சகோ.ராஜாமணி, சகோ.ரீகன்
அவர்களின் செய்தி
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 173

### போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடையை வசன ஆதாரத்துடன் எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியையும் எழுதி அனுப்பவும். விடை மார்ச் மாத இதழில்.

1. **சகோதரருக்குள்ளே வாக்குவாதங்கள் உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் யாருக்கு அறிவிக்கப்பட்டது?**
2. **அவர்கள் சம்பூரணமடைந்து அநேகராயிருந்தாலும் அறுப்புண்டுபோவார்கள் என்று எந்த தீர்க்கனைக்கொண்டு கர்த்தர் உரைத்தார்?**
3. **விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார் என்று சொன்ன அப்போஸ்தலன் யார்?**
4. **பொய்ப்போதகம் பண்ணுகிறதுமான விக்கிரகமும் எண்ணத்துக்கு உதவும் என்று எந்த தீர்க்கன் மூலம் கர்த்தர் பேசினார்?**
5. **நான்உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன் என எழுதும் அப்போஸ்தலன் யார்?**
6. **செப்பனியா யாருடைய குமாரன்?**
7. **சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் எப்படியிருக்கவேண்டும்?**
8. **மாம்சமான சகலமான பேர்களே, கர்த்தருக்கு முன்பாக எப்படியிருக்க வேண்டுமென கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியைக் கொண்டு விளம்பினார்?**
9. **சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள்முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களா?**
10. **நீங்கள் என் வழிகளைக் கைக்கொள்ளாமல் வேதத்தைக்குறித்துப் பட்சபாதம் பண்ணினபடியினால் நானும் உங்களை எல்லா ஜனத்துக்கு முன்பாகவும் எப்படிப்பட்டவர்களாக்கினேன் என்கிறார்?**




- தன்னுடைய பிரயாணத்திலும் குற்றுயிராக இருந்தவனுக்கு உதவினான் - லூக்.10:33
- அவனுக்கு முதலுதவியும் செய்தான் - லூக்.10:34
- அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றிக்கொண்டு போனான் - லூக்.10:34
- சத்திரத்துக்கு கொண்டுபோய் அவனைப் பராமரித்தான் - லூக்.10:34
- அவனை பராமரிக்க சத்திரத்தானுக்கு பணங்கொடுத்தான் - லூக்.10:35
- மேலும் அதிகமாக செலவு செய்தால் திரும்ப வரும்போது தருவதாக சொல்லிச் சென்றான் - லூக்.10:35
- இச்சம்பவத்தை இயேசுவானவர் ஒரு நியாயாதிபதியோடு பேசிக்கொண்டிருந்தார் - லூக்.10:25

முன்னணையிலே கிடத்தியிருக்கிற பிள்ளையையும் கண்டார்கள். கண்டு, அந்தப் பிள்ளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள். மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து, சிந்தனைபண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப் பட்டதின்படியே கேட்டு, தாங்கள் கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டு திரும்பிப்போனார்கள்.

இயேசுவின் பிறப்பு மனிதர்களாகிய நம் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்ற ஒரு பெரிய நற்செய்தியே. இந்த நற்செய்தியை தேவதூதர் முதலாவது மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். அந்தநேரத்தில் பரம சேனையின் திரள் அந்த தேவ தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனை துதித்தார்கள். மேய்ப்பர்களும் சென்று தங்களுக்கு சொல்லப்பட்ட தின்படியே கேட்டு, கண்ட எல்லாவற்றிக்காகவும் தேவனை மகிமைப்படுத்தி துதித்துக்கொண்டு திரும்பினார்கள். 2000 ஆண்டுகளுக்கு பின்னால் இருக்கிற நமக்கும் அது நற்செய்தியே. அவர் மனுஷனாக பிறந்து நமக்காக மரித்ததினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. நாமும் அவர் மூலமாய் இரட்சிக்கப்படுகிறோம்.

மனப்பாட வசனம்

"அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவளுக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத்.1:21)

தெரிந்து கொள்வோம்



## இந்திய முதன்மை பெண்மணிகள்

- K.R.K.Ravi Asir
Associate Editor

1. முதல் பெண் குடியரசுத் தலைவர் - பிரதீபா பாட்டீல்
2. முதல் பெண் பிரதமர் - இந்திரா காந்தி
3. முதல் பெண் ஆளுநர் - சரோஜினி நாயுடு
4. சுப்ரீம் கோர்ட் முதல் பெண் நீதிபதி - அன்னாசாண்டி
5. தமிழ்நாட்டின் முதல் பெண் நீதிபதி - பத்மினி ஜேசுதுரை
6. முதல் பெண் முதலமைச்சர் - சுதேசா கிருபளானி
7. முதல் உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் - ரீட்டா பாரியா
8. முதல் பெண் ஐ.பி.எஸ் - கிரண்பேடி
9. முதல் இந்திய விண்வெளி வீராங்கனை - கல்பனா சாவ்லா
10. முதல் இந்திய பெண் பைலட் - பிரேம் மாதூர்
11. முதல் பெண் பேருந்து ஓட்டுநர் தமிழ்நாடு - வசந்த குமாரி
12. எவரெஸ்ட் சிகரத்தில் 2 முறை ஏறிய முதல் இந்திய பெண் - டிக்கி டோல்மா




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 15 ஜனவரி-2015 கனி - 2


ஆசிரியருரை

## இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்

### For Abundance of the Heart the mouth Speak



**இ**ருதயத்தில் என்ன இருக்கிறதோ அதுவே வாயின்வழியாக வெளிப்படும். இது குறித்து பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். "நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்" (மத்.12:35). இப்படியாக அவனவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறதோ அதையே அவன் வெளிப்படுத்துவான். இருதயம் நல்லவையாக இருக்கும்போது அதிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளும் நல்லவையாகவே இருக்கும். விதை விதைக்கிற உவமையைப் பற்றி கர்த்தர் சொல்லும்போது; "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்றார் (லூக்.8:15). இன்றைக்கு கர்த்தருடைய வசனம் பலவகையில் விதைக்கப்படுகிறது. அதைக்கேட்கிறவர்கள் தங்களுடைய இருதயத்தில் அவைகளைப் பதித்துக்கொண்டு பொறுமையுடனே பலன் கொடுக்கிறார்கள். பலர் அதைக்கேட்டும் அதனுடைய வல்லமையை உணராதவர்களாக அதைப் பற்றிக்கொள்ளாமல் உலக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களுடைய ஆத்துமாக்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். நிலம் நன்றாக இருந்தால் அதில் விதைக்கப்பட்ட விதையும் நன்றாக வளர்ந்து பலன் தரும். அதைப்போல சிலர் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்களைப்போல, அவைகளை கேட்டு பெற்றுக்கொண்டு பலன்கொடுக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

ஆண்டவர் இயேசு "பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்" என்றார் (மத்.13:44). நலமான பொருட்களை வாங்குவதற்கு எல்லோருக்குமே விருப்பமாக இருக்கிறது. ஏன்? அது நல்ல பொருள் என நினைக்கிறோம். பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது என்ற இந்த உவமையில் சொல்லப்பட்ட மனுஷன். அந்தப் பொக்கிஷத்தைக் கண்டு அதை மறைத்து, அதைப்பற்றிய

சந்தோஷத்தினாலே சென்று தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தை வாங்குகிறான். அன்பு நேயரே, நீ பரலோகராஜ்யத்தைக் குறித்து என்ன நினைக்கிறாய்? அதில் பிரவேசிக்க என்ன செய்யவேண்டும்? அதை அடைந்துகொள்ள நீ பிரயாசப்பட்டுக்கொண்டிருக்கிறாயா? மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என திருமறை கேள்வி எழுப்புகிறது. மறைக்கப்பட்ட பொக்கிஷத்தை அடையவேண்டுமென்று தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக்கொண்ட மனிதனைப்போல, நீ பரலோகராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பிரவேசிக்க இன்றே உனக்குள்ளவைகளை விற்றாகிலும் கர்த்தருடைய வார்த்தையை சம்பாதித்துக்கொள். அது உன் ஆத்துமாவை காக்கும். நீ நித்தியமாக தேவனோடு வாழும் பாக்கியத்திற்கு நேரே உன்னை வழி நடத்தும்.

மேலும், "பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்" என படித்தோம். நிலம் மோசமாக இருக்கும்போது அதில் விதைக்கப்பட்ட விதையும் வளர்ச்சியடையாமல் பலன்கொடாமற்போகிறது. அதைப்போல பொல்லாத மனுஷனுடைய இருதயமானது பொல்லாங்கானவைகளையே எடுத்துக்காட்டுகிறது. நலமான காரியத்திற்கு அங்கே இடமில்லை. ஆகையால் பொல்லாங்கானவைகளால் நிறைந்திருக்கிறது. இயேசுவின் சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸை அறிவீர்கள். அவன் ஒரு முறை "இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்" (யோவா.12:5). அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான். இப்படிப்பட்ட அநேகரைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படிப்பட்டவர்கள் பொல்லாங்கனால் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் எவைகள் நிறைந்திருக்கிறதோ அவைகளே வாயின் வழியாக வெளிப்படும். யூதாசும் பண ஆசையுள்ளவனாயிருந்தபடியால் அவன் இப்படிச்சொன்னான். மேலும்,சிலுவையில் தொங்கிய ஒரு கள்ளன் இயேசுவைப் பார்த்து "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்" (லூக்.23:39). அவனுடைய இருதயத்தில் விசுவாசம் இல்லை. மற்றவர்களைப்போல இயேசுவை இகழ்ந்தான். ஆனால் மற்றவன் அவனைப் பார்த்து நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? என்று கேட்டான். இவனுடைய இருதயம் மனந்திரும்பியதாகவும், செம்மையாகவும் இருந்தது. ஆகையால் இவன் இரட்சிக்கப்பட்டான்.


நல்ல மனுஷனுடைய இருதயத்தைப் பற்றியும், பொல்லாத மனுஷனுடைய இருதயத்தைப் பற்றியும் நாம் தியானித்தோம். இப்படிப்பட்டவைகளில் தேவனுடைய விருப்பம் என்னவாயிருக்கிறது? "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுது வந்திருக்கிறது தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" என காண்கிறோம் (யோவா.4:23). தொழுகையில் ஆவியோடும் மற்றும் உண்மையோடும் என்ற வார்த்தைகளைக் காண்கிறோம். ஆவியோடு என்று சொல்லக்கூடிய வார்த்தையை அநேகர் தவறாக



சிறுவர் பகுதி

# நற்செய்தி
# Good News

**வேதபகுதி: லூக்கா 2:1-20**



நற்செய்தி என்றாலே எல்லோருக்கும் சந்தோஷந்தானே, ஆம் எல்லோருக்கும் சந்தோஷம்தான். இன்றைக்கு நான் சொல்லப்போகிற நற்செய்தி உலகத்திற்கு அறிவிக்கப்பட்ட உன்னதமான நற்செய்தி. அது எப்பொழுது என்றுதானே கேட் கிறீர்கள். இயேசுகிறிஸ்து பிறப்பின் போது தேவதூதனாலே மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தி. பிரதர், அந்த நற்செய்தியை கொஞ்சம் சொல்லுங்க என்கிறீர்கள் அப்படித்தானே. இதோ சொல்லத்தானே இங்கே வந்திருக்கிறேன்.

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டுமென்று அகஸ்துராயனால் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அப்பொழுது யோசேப்பு, தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமா யிருந்தபடியினாலே, தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப்பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப் போனான். அவ்விடத்தில் அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப்பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். எப்படியிருந்திருக்கும் இல்லையா? கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோஎல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்தநேரமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் பெத்லகேம் ஊருக்குப் போய், நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி, தீவிரமாய்வந்து, மரியாளையும், யோசேப்பையும்,

# பாரம்பரியம் – Tradition

- S.Reagan

பிரியமான தேவ பிள்ளைகள் யாவருக்கும் இவ்விதழின் மூலம் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டின் வாழ்த்துக்கள். இவ்வாண்டை தேவன் நமக்கு பிரியோஜனமாக வழி நடத்துவார்.

பாரம்பரியம் என்ற தலைப்பில் உங்களுடன் பேசுவதில் மகிழ்ச்சி. பாரம்பரியத்தால் இன்று அநேக கிறிஸ்துவர்கள் தேவனுடைய கற்பனையை மீறி நடக்கிறார்கள் என்று மத்.15:3-ல் வாசிக்கிறோம். நம்மில் அநேகர் நாங்கள் பாரம்பரியமாய் கிறிஸ்துவர்களாய் இருக்கிறோம் எல்லாம் தெரிந்தவர்களைபோல தங்களை மேன்மை பாராட்டி தேவனுடைய வசனத்தின் சட்டத்திற்கு மீறுகிறார்கள். நாம் உண்மை கிறிஸ்துவர்கள் என்றால் நாம் கிறிஸ்துவை பின்பற்ற வேண்டும். ஆனால் இன்று நாம் பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மாற்கு 7:8-ல் வாசிக்கும்போது அதில் நாம் தேவனை தள்ளிவிட்டு மனுஷனுடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டு வருகிறோம் எப்படி? மத்.15:9-ல் மனுஷனுடைய கற்பனைக்கு செவிகொடுத்து இன்று அநேகர் வீணாய் தேவனுக்கு ஆராதனை செய்கின்றோம். இவைகளை பற்றி ஏசாயா தீர்க்கதரிசி தன் புத்தகத்தில் சொல்லியிருக்கிறான் ஏசா.29:15ல் வாயும், உதடும் மட்டும் அசைகிறதே தவிர, தேவன் எதிர்பார்க்கும் இருதயமோ தூரமாய் இருக்கிறது. பாரம்பரியத்தால் நாம் தேவனை வெறுக்கிறோம் என்று நீதி.1:25-ல் சொல்லப்படுகிறது. பவுல் கொலோ.2:8-ல் இவை எல்லாம் கிறிஸ்துவைப் பற்றினது அல்ல என்கிறார். பிரியமான வாசகர்களே நாம் பாரம்பரிய கிறிஸ்துவர்களாய் இல்லாமல் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்துவர்களாய் இருப்போம்.

கட்டளையே விளக்கு
வேதமே வெளிச்சம்
போதகசிட்சையே ஜீவவழி
நீதிமொழிகள் 6:23



ஜெபியுங்கள்

- இப்புத்தாண்டைக் காணசெய்த தேவனுக்கு நன்றி சொல்லி..
- புதிய ஆத்துமாக்களுக்காக...
- புது நம்பிக்கைக்காக...
- புதிய ஊழியங்களுக்காக...
- புதிய வெளியீடுகளுக்காக...




தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041







புரிந்துகொண்டு குதித்துக்கொண்டும், ஆடிக்கொண்டும், ஒரு விதமான உணர்ச்சியோடும், பரவசத்தோடும், மிகப்பெரிய சத்தத்தோடும் தொழுதுகொள்ள வேண்டும் என்று நினைக்கின்றனர். அப்படியல்ல ஆவியோடு என்று சொல்லும்போது; தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதை நாம் முதலாவது நினைக்க வேண்டும். அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே நாமும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். அங்கு விக்கிரகங்களுக்கு இடமில்லை. கண்களை மூடி ஆவிக்குரிய தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். இது அமைதலோடு செய்யப்படவேண்டிய ஒன்று. அசுத்த ஆவி பிடித்தவன் சத்தம்போட்டு கூச்சலிட்டதாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஆவிக்குரிய தொழுகையில் உண்மையிருக்க வேண்டும். உண்மை என்று சொல்லும்போது பொய்க்கு அங்கு இடமில்லை. தேவன் உண்மையுள்ளவர் அவரை தொழுதுகொள்ள கூடி வருகிறவர்களும் உண்மையோடு அவரை தொழுதுகொள்ள வேண்டுமென அவர் விரும்புகிறார். ஆகையால் அவர்களுடைய தொழுகையில் உண்மை காணப்படவேண்டும்.

இது குறித்து கர்த்தர் சொல்லும்போது; " உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என்கிறார் (மாற்.12:30). மற்றவர்களுக்காக தேவனை தொழுதுகொள்ளும்படியாக செல்லக்கூடாது. சிலர் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறேன். என் மனைவிக்காக நான் சபைக்குச் செல்கிறேன் என்றும், என் பிள்ளைகளுக்காக சபைக்குச் செல்கிறேன் என்றும் சொல்ல கேள்விப் பட்டிருக்கிறேன். ஆக, இவர்கள் உண்மையிலே தேவனை தொழுது கொள்ள முழு இருதயத்தைக் கொடுக்கவில்லை. இப்படிப்பட்டவர்களுடைய தொழுகையை கர்த்தர் அங்கிகரிக்கமாட்டார். நாம் நம்மையே முழுமையாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து அவரை ஆராதிக்க அல்லது தொழுதுகொள்ளவேண்டும். அதையே கர்த்தர் அங்கிகரிப்பார். மனிதர்கள் பெரும்பாலும் முகத்தைப் பார்த்து தீர்ப்புச் செய்வார்கள். ஆனால் கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார் என்பதை நீங்கள் முதலாவது அறிந்துகொள்ளுங்கள். சாமுவேல் என்ற தீர்க்கன் அவ்விதமாக பார்த்தான். ஆகையால் கர்த்தர் அவனைப்பார்த்து; "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1சாமு.16:7). அன்பான வானொலி நேயரே, உங்களுடைய இருதயம் எப்படி இருக்கிறது? தேவனுடைய பார்வையில் அது நல்ல இருதயமாக, அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும் இருதயமாக இருக்கட்டும். பொல்லாதவைகளை உங்கள் கண் முன்வைக்காதிருங்கள். அவைகளை கர்த்தர் அருவருக்கிறார். நலமான காரியங்களை சிந்தியுங்கள். உங்களுடைய முழு இருதயத்தையும் கர்த்தருடைய சமுகத்திற்கு நேராக திருப்புங்கள். ஆண்டவர் இயேசு மலைப்பிரசங்கத்தில்; "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்கிறார் (மத்.5:8). நீங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்கும்போது தேவனைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறுவீர்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்கமுடியாது. ஏனெனில் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தமுள்ளவர்களாயிருங்கள் என்கிறார். ஆகையால் பரிசுத்தமுள்ள தேவனை உங்கள் இருதயத்தில் பரிசுத்த அலங்காரத்துடனே ஆராதியுங்கள்.

மனிதனை தீட்டுப்படுத்தக்கூடியது அவனுடைய இருதயமே என வேதம் எச்சரிக்கிறது. அநேகர் தொட்டால் தீட்டு என்றும் அல்லது பார்த்தால் தீட்டு என்றும் சொல்லுவார்கள். ஆனால் பரிசுத்த வேதம்; "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என போதிக்கிறது (மத்.15:18). வாய்க்குள் போகிறது மனுஷனை தீட்டுப்படுத்தாது. ஆனால் அநேகருடைய எண்ணங்கள் தவறானதாகவே இருக்கிறது. வாய்க்குள் போகிறதே மனுஷனை தீட்டுப்படுத்தும் என்கிறார்கள். வாய்க்குள்ளே போகிற நல்லவைகள் மனுஷனை காப்பாற்றுகிறது. வாயிலிருந்து வெளிவரக்கூடிய வார்த்தைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றன அவைகளே ஒரு மனுஷனை தீட்டுப்படுத்தும். அப்படி என்னவெல்லாம் வருகிறது? என்று நீங்கள் சிந்திக்கலாம். "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்" (மத்.15:19,20). இருதயத்திலிருந்து வரக்கூடிய பொல்லாத சிந்தனைகள் ஒரு மனிதனை கொலைகாரனாகவும், கொள்ளைக்காரனாகவும், விபசாரகாரனாகவும், வேசிக்கள்ளனாகவும் மாற்றிவிடுகிறது. இவைகளால் அவனுடைய ஆத்துமா கெட்டு தேவனாலும், ஜனங்களாலும் புறம்பாக்கப்படுகிறான். தாவீது என்ற அரசன் சொல்லுகிறான்; "என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங்.66:18). அநேகருடைய ஜெபங்கள் கேட்கப்படவில்லை. இதற்கு காரணம் என்ன? அவர்களுடைய சிந்தை சரியில்லாமல் தேவனுடைய சமுகத்தில் ஜெபித்திருக்கலாம். அதனால் ஆண்டவர் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில்கொடாமலிருப்பார். நாம் இயேசு கிறிஸ்துவில் இருந்த சிந்தைப்படியே இருப்போமானால், நாம் தேவனிடத்தில் கேட்டவைகளைப் பெற்றுக்கொள்வோம். சிந்தை சரியாகும்போது அவனுடைய இருதயமும் சரியாகும்.

தாவீது தேவனுடைய ஆலயத்தை கட்ட முயற்சிக்கும்போது; அதை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. நீ இரத்தம் சிந்திய கரங்கள் உடையவனாயிருக்கிறாய் என்றார். தாவீதின் பாவம் அவனுடைய நற்காரியங்களைச் செய்ய தடையாயிருந்தது. அவன் மனந்திரும்பும்போது, அவனுடைய பாவத்தைக் கர்த்தர் மன்னித்தார். நம்முடைய இருதயத்தில் இருக்கிற பாவக்கறைகள் களையப்படவேண்டும். அதற்கு நாம் செய்யவேண்டுவதென்ன, நம்முடைய இருதயத்தை தேவனுடைய வார்த்தைக்கு நேரே திருப்பவேண்டும். "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்" என ஞானி சாலொமோன் குறிப்பிடுகிறார் (நீதி.28:26). உங்களுடைய இருதயத்தை நம்பிக்கொண்டிராமல் கர்த்தருடைய வசனங்களுக்கு கவனமாக செவிகொடுங்கள்.

**மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு எப்படிப்பட்டவர்கள்?**

அருவருப்பானவர்கள் என நீதி.11:20-ம் வசனத்தில் படிக்கிறோம். அருவருப்பு என பார்க்கும்போது; நாய், தான் கக்கினதையே தின்னும். அது நமக்கு அருவருப்பு. அதைப்போல செய்த பாவத்தையே நாம் திரும்ப திரும்ப செய்யும்போது அது கர்த்தருக்கு அருவருப்பு. அப்படிப்பட்டவர்கள் மாறுபாடான இருதய முடையவர்கள். ஒழுங்கில்லாதவர்கள், ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி வாழ்கிறவர்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து யூதா எழுதுகிறார்; "இவர்கள்



**மென்மையாக நடந்துகொள்வது:**

1. இது தாழ்மையின் பலன். ஒருவன் தானே எல்லாவற்றுக்கும் அதிகாரியல்ல என்பதை உணர்ந்தபின், மென்மையும் மனதுருக்கமான நடக்கையும் அதன் விளைவாகிறது.

2. மற்றவர்களுடைய உணர்வுகளையும் எண்ணங்களையும் நாம் உணர்கிறோம்.

**பொறுமை:**

1. ஒரு பிரச்சனையை சரிசெய்ய நீண்ட நேரம் மற்ற நபரோடு அல்லது கடினமான சூழ்நிலையில் பாடுபட மனதாயிருப்பது.

2. எல்லாவற்றைக்குறித்தும் தேவன் மீது முழு நம்பிக்கையாயிருப்பது. நாம் நம்மை நாமே எதிர்த்து எதும் செய்வதில்லை. மற்றவர்களுடைய முறைகளை நாம் தாங்கிக்கொள்கிறோம்.

**அன்புடன் பொறுத்துக் கொள்வது. அன்பு பொறுமை மற்றும் பொறுத்துக்கொள்வதை சாத்தியமாக்குகிறது:**

1. அன்புடன் பொறுத்துக்கொள்வதென்றால் எல்லாவிதமான போதனைகளையும் சகித்துக்கொள்வதும் ஏற்றுக் கொள்வதுமல்ல. சிலருடைய மனதில் கிறிஸ்தவ மார்க்கமே ஒரே மார்க்கம் என்று எண்ணுவதை சகிப்புத் தன்மையற்றது அன்பற்ற தன்மையென்று நினைக்கின்றனர். இது உண்மையானால் பவுல்கூட சகிப்புத்தன்மைபெற்றவரும் அன்பற்ற வருமாவார்.

2. இதன் பொருள் என்னவென்றால் ஒற்றுமை காக்கப்பட வேண்டும். மிகுந்த கவனிப்புடன் இது பாதுகாக்கப்பட வேண்டும். ஒற்றுமை காக்கப்படுவது எளிதல்ல. இதற்கு மிகுந்த ஜாக்கிரதை தேவைப்படுகிறது.

3. இந்த புத்திமதி சபையின் நடத்துனர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து கொரிந்தியர்களுக்கும் எழுதப்பட்டது. இந்த ஏழு ஒன்றுகள் மட்டுமே ஒற்றுமைக்கு அடிப்படையானதல்ல. ஏனென்றால் சுவிசேஷம் அனைத்துமே ஒன்றுமையானதுதான் பிரிக்கப்பட்ட சபையே சுவிசேஷத்தை மறுதலிக்க அடிப்படையாகும்.

**ஒரே ஒரு சரீரம் மட்டுமே உண்டு. அந்த சரீரம் சபையே (எபே.1:22,23)**

1. கிறிஸ்து சரீரத்தின் தலை. இதுவே அனைத்து அதிகாரங்களுமாம்.

2. அனைத்து கிறிஸ்தவர்களும் அந்த சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறார்கள் (சரீரமாக 1கொரிந்தியர் 12)


3. பவுலின் காலத்திலிருந்த புறமத உலகத்தில் அநேக வழிபாடுகளிருந்தன. ஒருவர் எதிலிருந்து வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாம். பல நம்பிக்கைகளோடு யூதர்களும் புறமதஸ்தரும் ஒரே சரீரத்தில் ஒன்று பட்டிருந்தார்கள். நவீன உலகம் இந்த ஒரே சரீரத்தை காணமுடியாத புரிந்துகொள்ளமுடியாத சபையென்று சொல்கிறது. கிறிஸ்துவுடன் தங்களுக்கு விசுவாசம் உண்டென்று உரிமை கொண்டாடுகிற பிரிவினை சபையாரே இந்த காணப்படாத நிலை. இந்தப் பிரகாரமாக காணக்கூடிய சபையின் அங்கத்தினர்களாக நாம் இருக்கலாம் அல்லது காணக்கூடிய எந்த சபையிலும் அங்கமாக இருக்கலாம் அல்லது காணக்கூடிய ஒரு சபையின் அங்கமாகவும் இருக்கலாம்.

1. புதிய ஏற்பாட்டிலே எந்த விதமான தெளிவான விளக்கமும் அது காணக்கூடியது அல்லது காணக் கூடாததா என்பதற்கு இல்லை. அப்.2:47 நாம் எப்படி ஒன்றாயிருந்து கொண்டே பலவிதமான முரண்பட்ட கொள்கைகளையும் போதிக்க முடியும் என்பதற்கான ஒரு நவீன முயற்சியே இது.

2. தனிப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தனிப்பட்ட அங்கங்களே அவர்கள் அத்தியாவசியமான நம்பிக்கைகளை கைக்கொண்டு போதிக்கிற சரீரங்களல்ல.

## பாடம் -11 ஒற்றுமைக்கான தேவனுடைய அடித்தளம் - *Jerry Bates*

## God` Platform for Unity -மொழியாக்கம் சகோ.தானியேல், சென்னை




1. 400 ஆண்டுகளுக்கு முன் ஐந்தாம் சார்லஸ் பரிசுத்த ரோமப் பேரரசின் சக்கரவர்த்தியாயிருந்து அந்தப் பொறுப்பை விட்டு இறங்கினார். அதிக வருடங்களை அவர் ஸ்பெயினில் உள்ள தனது அரண்மனையில் கழித்தார். அங்கே அவருக்கு 6 சுவர்க்கடிகாரங்கள் இருந்தன. அவரால் அவைகளையெல்லாம் ஒரே நேரத்தில் (நேரத்தைக் காட்டும்போது) இசைக்கச் செய்ய முடியவில்லை. அவருடைய நினைவுகளிலிருந்து பின்வருமாறு எழுதினார். ஆறு வித்தியாசமான கடிகாரங்கள் எப்படி ஒரு நேரத்தில் இசைக்க இயலும்? இன்னும் அதிகமாக 6 பரிசுத்த ரோமசாம்ராஜ்யங்களும் ஒற்றுமையாய் வாழ்வதென்பது எப்படி கூடாத ஒன்று. அது நடக்கக் கூடாது அவர்கள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொண்டாலும் அது கூடாதது.

2. இன்றைக்கு நம்மைச் சுற்றியுள்ள உலகத்தை (மக்களை) நாம் காணும்போது அவர் சொல்வதை ஒத்துக் கொள்ளத் தோன்றுகிறது.

3. எல்லாம் ஒரே இடத்திலிருந்து சக்தியளிக்கப்பட்டு ஒரே தரத்தில் இயங்கும்படி செய்திருந்தாலும் கடிகாரங்கள் எல்லாம் ஒரே நேரத்தைக் காட்டி இசைப்பதென்பது இன்றைக்கு சாத்தியமில்லை, என்பது நமக்குத் தெரியும்.

4. இயேசுவானவர் ஒருமைப்பாட்டுக்காக ஜெபிக்கிறார் (யோவா.17:20,21).

5. பவுல் இதை கட்டளையாய்ச் சொல்கிறார். வேண்டிக்கொள்கிறேன். என்கிற வார்த்தை மிகவும் பலமான வார்த்தை. அதன் பொருள் கெஞ்சுவது வேண்டுவது அல்லது யாசிப்பது என்பதாகும். இது ஏதோ பவுலுடைய தனிப்பட்ட எண்ணத்தை திருப்திப்படுத்த அல்ல மாறாக தேவசித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுப்பதற்காக.

நம்முடைய அழைப்புக்கு பாத்திரமாக நாம் நடந்துகொள்ளவேண்டும். நாம் செய்யும் வேலைக்கும் நம்முடைய நடவடிக்கைகளுக்கும் ஒரு சமன்பாடு இருக்கவேண்டும். கர்த்தருக்கு நிந்தையை கொண்டுவராதபடி நாம் நடந்துகொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரத்தில் (சபையில்) சமாதானம். இணக்கம் மற்றும் ஒற்றுமை இருக்கும்படியாக நடந்து கொள்வதுதான் தகுதியாக நடப்பதன் குணாதிசயங்களுள் ஒன்று.

ஆகையால் சமாதானத்துக்கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக் கடவோம் (ரோம.14:19).

6. ஒற்றுமை மற்றும் ஐக்கியம் என்பது வித்தியாசமானது. இரண்டு பூனைகளை, ஒன்றாக கட்டிப்போட்டால் அவைகள் ஒன்றாயிருக்கும், ஒற்றுமையாயிருக்காது. இன்றைக்கு பேசப்படுகிற ஒற்றுமை என்பது விசுவாசத்தைப்பற்றி சொல்லப்படுகிற அனைத்து (போதனைகள்) கூற்றுகளையும் சகித்துக்கொள்வதுதான்.

ஒற்றுமை என்பது மனம் ஒரே மற்றும் ஒரே சிந்தையாகும்.

ஒற்றுமை பிரிவினையை தடைசெய்கிறது. ஐக்கியம் பிரிவினையை அனுமதிக்காது அதை உற்சாகப்படுத்துகிறது.

இயேசுவானவர் சமய ஒற்றுமைக்காக வேண்டிக்கொண்டார். வேற்றுமையில் ஒற்றுமைக்காக அல்ல. மார்க்க பேதங்களை பவுல் கண்டனம் செய்கிறார்.

**தாழ்மை:**

1. இது கர்வத்துக்கும் தற்பெருமைக்கும் எதிரான ஒன்று. நம்முடைய எல்லைகள் நமக்குத்தெரியும். சரீரத்தில் நாம் தலையல்ல என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

2.தாழ்மையுள்ள மனிதன் பிறர் நலனை தனக்கு முன்வைக்க முயற்சிப்பான்.



உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 12,13). இப்படிப்பட்ட மாறுபாடுள்ள இருதயமுடையவர்களை விட்டு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். தேவன் அருவருக்கிற மக்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள். உங்களுடைய வாயின் வார்த்தைகளைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### வே அறிவுப்போட்டி எண் *171* ன் விடைகள்

1.திருவசனத்திற்கு - 1பேது.2:8
2. தன் மரணத்திலே - நீதி.14:32
3. ஜலப்பிரளயத்தை - 2பேது.2:5
4. செம்மையானவனாக - பிர.7:29
5. அவருடைய குமாரனில் - 1யோவா.5:11
6. ஐயோ - ஏசா.29:15
7. தேவன் - 1யோவா.4:15
8. ஏரேமியா, அனனியாவைப் - ஏரே.28:15
9. ஆகாயத்துப்பட்சிகள் - மத்.6:26
10. தங்களையே மேய்த்தார்கள் - எசே.34:8

❑ <u>வெற்றிபெற்றவர்கள்</u>

1. J.ஜான்பிரபாகர் - டி.கள்ளிப்பட்டி
2. Mr.ரமேஷ்டேவிட் - சிவகாசி
3. Sis.தேவி ராஜசிங் - திருப்பூர்
4. J.ஆஷா ஹெலன் - தூத்துக்குடி
5. Sis.ராஜம்மாள் - திருப்பூர்
6. T.ராஜாத்தி - கோம்பை
7. Miss.சாந்தாதேவி - பன்னைப்புரம்
9. S.லதா சூரியமூர்த்தி - பன்னைப்புரம்
10. T.ஏஞ்சலின்நேசமலர் - மதுரை
11. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
12. M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
13. Tmt.மரகதம்திரவியம் - கோம்பை
14. Sis.அல்லிராணிகாட்வின் - சென்னை
15. S.சரோஜினி - தாராபுரம்
16. Mrs.சாந்தாபழனி - தர்மபுரி
17. Ira.எதிராசன் - சங்கரி
18. D.டேவிட் - சென்னை
19. Mrs.பொன்னிவிக்டர் - தாராபுரம்
20. S.தங்கம் - கன்னியாகுமரி
21. S.அன்னம்மாள் - தூத்துக்குடி
22. Mrs.ருக்மணிஜெயசீலன் - பன்னைப்புரம்
23. K.மோகன் - குமாரபாளையம்

### வே அறிவுப்போட்டி எண் *172* ன் விடைகள்

1.ஒட்டகமானது - மாற்.10:25
2. நேபுகாத்நேச்சார் - தானி.4:30
3.தேவாலயத்தில் அவரிடத்திற்கு - லூக்.21:38
4. பலனற்ற, கனிகொடுக்கிற -ஓசியா 10:1
5. மார்த்தாள் - யோவா.11:22
6. நியாயத்தை, ஆமோஸ் - ஆமோ.5:15
7. பேதுரு - அப்.5:15
8. யோனா - யோனா.1:15
9. ரெபெக்காள் - ரோம.9:12
10. மீகா - மீகா.7;17

❑ <u>வெற்றிபெற்றவர்கள்</u>

1. S.தங்கம் - கன்னியாகுமரி
2. A.ரெபேக்காள் - மதுரை
3. Tmt.மரகதம்திரவியம் - கோம்பை
4. Mr.ரமேஷ்டேவிட் - சிவகாசி
5. J.ஆஷா ஹெலன் - தூத்துக்குடி
6. J.ஜான்ஸி - ஆனைமலை
7. Sis.அல்லிராணிகாட்வின் - சென்னை
8. Mrs.ருக்மணிஜெயசீலன் - பன்னைப்புரம்
9. Mrs.சாந்தாபழனி - தர்மபுரி
10. K.மோகன் - குமாரபாளையம்
11. T.ஏஞ்சலின்நேசமலர் - மதுரை
12. Dr.J.பெனியேல் தேவசகாயம் - மதுரை
13. S.ஜான் - பாண்டமங்கலம்
14. P.அன்பழகன் - பாண்டமங்கலம்
15. K.நந்தகுமார் - புதூர்
16. P.வடிவேல் - பாண்டமங்கலம்
17. P.ரூத் பிரின்ஸ் - சாணார்பாளையம்
18. P.அன்பழகன் - பாண்டமங்கலம்
19. V.அருணாசலம் - பாண்டமங்கலம்
20. P.லீதியாள் - பாண்டமங்கலம்
21. S.சிம்சோன் - பாண்டமங்கலம்
22. S.துளசிமணி - பாண்டமங்கலம்
23. K.ரோசலின்மேரி - பாண்டமங்கலம்
24. S.உமா மகேஸ்வரி - பாண்டமங்கலம்
25. M.இராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
26. R.கஸ்தூரி - ஒட்டநத்தம்
27. A.ரோஸ்மேரி - எருக்கஞ்சேரி
28. M.தவமணி தேவி - திருப்பூர்
29. Mrs.ராஜம்மாள் - திருப்பூர்
30. S.மணீஸ் - திருச்சி
31. T.ராஜாத்தி - கோம்பை
32. Ira.எதிராசன் - சங்கரி

**தூங்கும் முன்பு**
**தினமும்**
**வேதம் வாசியுங்கள்**




# வேதாகமம்
## The Bible

J.C.Choate

வேதாகமம் புத்தகங்களின் புத்தகம்; இது மனிதவரலாற்றையும், நன்மை தீமையினையும் தாங்கியுள்ளது; இது அவனுடைய தற்கால நிலையை வெளிப்படுத்துகிறது, மேலும் மரணத்திற்கு அப்புறம் ஒரு வாழ்க்கை உண்டென உறுதிப்படுத்துகிறது.

வேதாகமம் 66 புத்தகங்களால் ஆனது, இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது: 39 புத்தகங்களைத் தாங்கிய பழைய ஏற்பாடு, 27 புத்தகங்களைத் தாங்கிய புதிய ஏற்பாடு.

வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல், ‘‘வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜமுள்ளவைகளாயிருக்கிறது’’ (2தீமோ.3:16,17). வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறபடியினால் நாம் இதனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் நம்பவேண்டியவர்களாயிருக்கிறோம். அத்தோடுகூட அதற்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாகவுமிருக்கிறோம்.

வேதாகமம் தம்மிலே தாமே போதுமானதாகவும் பூரணமுடையதாகவுமிருக்கிறது. இத்தோடு ஒன்றும் சேர்க்கப்பட கூடாது, இதிலிருந்து ஒன்றும் குறைக்கப்படவும் கூடாது அல்லது எவ்வழியிலும் இதற்கு ஈடாக ஒன்றும் செய்யப்படவும் கூடாது (வெளி.22:18,19; கலா.1:7-9). அடுத்தாற் போல், பேதுருவுக்கு செவிகொடுங்கள்: ‘‘ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்’’ (1பேது.4:11).

வேதாகமம் நற்செய்தியினால் நிரம்பியுள்ளது. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷ புத்தகங்கள் தேவனுடைய குமாரனாகிய மேசியாவின் வருகையைக் குறித்து சொல்லுகின்றது. இந்த புத்தகங்களை வாசிக்கிற, கற்றுக்கொள்ளுகிற ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி நடத்தப்பட முடியும். அதன்பின் அப்போஸ்தலர் நடபடிகளுக்குத் திரும்புகையில், அவன் எவ்வாறு கர்த்தருக்குக் கீழ்ப்படிவது என்றும் எவ்வாறு சபையில் சேர்க்கப்படுவதும் என்றும், கற்றுக்கொள்ள முடியும் (அப்.2.). இதற்கும்மேலாக, வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் வரப்போகிற காரியங்களைப் படம்பிடித்துக் காண்பிக்கையில், 21 நிருபங்கள் கிறிஸ்தவ ஜீவியத்தைப் பற்றி விவரிக்கிறது.

வேதாகமம் உண்மையை உள்ளடக்கியுள்ளது. இதைப்போன்று சிறப்பாக விற்பனையாகும் புத்தகம் ஒருபோதும் இருந்ததில்லை. இதுபோன்று தொடர்ச்சியாக இருக்கும் புத்தகம் ஒன்றுமில்லை. இந்த புத்தகத்தை வாசியுங்கள், கற்றுக்கொள்ளுங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் சொல்லுகின்ற மற்றும் செய்கின்ற எல்லாவற்றிற்கும் இது உங்களுடைய வழிகாட்டியாக இருக்கட்டும்.



# எரேமியா - Jeremiah

-M.Rajamani

இவன் ஆனதோத் ஊரானாகிய இல்க்கியா ஆசாரியனின் குமாரன் (எரே.1:1). அபியத்தார் என்பவனைச் சாலொமோன் ஆசாரியனாயிராதபடி விலக்கி ஆனதோத்துக்கு அனுப்பி இருந்தான். எரேமியா அவனுடைய சந்ததியாய் இருக்கலாம்.

எரேமியா எருசலேம் மேல் வரப்போகிற தேவதீர்ப்புக்களைச் சொன்னதினிமித்தம் துன்புறுத்தப்பட்டான். ஒரு தடவை அவனைத் துரவிலே போட்டபோது அவன் அமிழ்ந்து சாகப்போனான் (எரே.38:6). பல வேளைகளில் அவன் ஜனங்களுக்காக துக்கித்து அழுதான். இதினிமித்தம் "கண்ணீர்விடும் தீர்க்கதரிசி" என்னும் பெயர் பெற்றான். அவன் அழுகிறதற்காக ஒரு குகைக்குப்போனான். அக்குகைக்கு எரேமியாவின் குறை என்ற பெயர் கொடுக்கப்பட்டது. கொல்கொதாவின் அருகில் இருக்கிறதாக பேசப்படுகிறது. எரேமியாவின் மரணத்தைப் பற்றித் திட்டமாய்ச் சொல்ல இயலாது. பாரம்பரியத்தின்படி அவன் எகிப்தில், அவனுடைய ஜனங்களாலேயே கல்லெறிந்து கொல்லப்பட்டானென்று சொல்லப்படுகிறது.

லிப்னா ஊரான் யோவகாஸ் சிதேக்கியா இராஜாக்களின் பாட்டன் (2இரா.24:18; 23:31). சிக்லாகில் தாவீதினிடம் வந்து சேர்ந்த பென்யமீன் கோத்திரத்து பராக்கிரமசாலி ஒருவன் (1நாளாஇ12:4).

மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த வீட்டுத் தலைவரில் ஒருவன் (1நாளா.5:24).

ரேகாபியருடைய வீட்டைச் சேர்ந்த யாசினியாவின் தகப்பன் (எரே.35:3). செருபாபேலோடு பாபிலோனிலிருந்து திரும்பி வந்த ஒரு ஆசாரியன். பின்பு இந்தப்பெயர் ஒரு சந்ததித் தலைவனுக்கு இருந்தது (நெகே.12:1,12).

முத்திரை போட்ட ஆசாரியரில் ஒருவன். அலங்கப்பிரதிஷ்டையில் உதவி செய்தான்.

வாலிபர் பகுதி

# நல்லாலோசனை
## Good Advice

ஏனோக்கைப் போல் <u>நட</u>

ஆபேலைப் போல் <u>தொழுதுகொள்</u>

நெகேமியாவைப் போல் <u>வேலைசெய்</u>

எரேமியாவைப் போல் <u>அழு</u>

யோபுவைப் போல் <u>கீழ்ப்படி</u>

மோசேயைப் போல் <u>வழிநடத்து</u>

தானியேலைப் போல் <u>ஜெபி</u>

பவுலைப் போல் <u>வென்றிடு</u>

இயேசுவைப் போல் <u>வாழ்ந்திடு</u>

-TVOTI

ராஜாதி ராஜா தம்மைத் தேடி வந்த ஸ்திரீகளுக்கு வாழ்த்துக் கூறியிருக்கிறாரென்றால் நாம் எம்மாத்திரம்! என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆம், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற சகோதரிகளாகிய நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரிகளை மனங்குளிர, கள்ளங்கமில்லா இதயத்துடன் வாழ்த்த வேண்டியது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆனால் அநேக நேரங்களில் சபை அங்கங்களாகிய நம்முடைய சகோதரிகளை நாம் மனதார வாழ்த்துவது கிடையாது. காரணம், நமக்குள் வாசஞ்செய்கின்ற பல்வேறு பாவங்கள். இன்னும் சில நேரங்களில் மற்றவர்கள் மேலுள்ள ஆசீர்வாதங்களைக் கண்டு பொறமைப்பட்டு வாழ்த்துதல் சொல்லுவதில்லை. வருகிற நாட்களிலாவது நம்முடைய சுயத்தை சுட்டெரித்துவிட்டு இயேசுவின் சுபாவத்தைப் பற்றிக்கொண்டு வாழ்த்துவோமா?

* **சீஷர்களின் வாழ்த்து:** இயேசுவின் பின்னே சென்ற சீஷர்கள் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். இயேசு சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பினபோது அவர்களை நோக்கி: "ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள்" (லூக்.10:5) என்று சொல்லி அனுப்பினார். கிறிஸ்துவுக்குள்ளான நாம் எங்கு சென்றாலும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகவே இருக்கவேண்டும். அன்று ஒரு அடிமைப்பெண்ணின் மூலம் சீரிய தேசத்திற்கு இரட்சிப்புவந்தது. கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருந்த அந்த அடிமைப் பெண் தன் எஜமானின் குஷ்டம் நீங்க வழியைக் காண்பித்தாள். அவள் தன் எஜமாட்டியைப் பார்த்து தன் எஜமான், எலிசா தீர்க்கதரிசி யினிடத்திற்குப் போனால் அவனுடைய குஷ்டரோகத்தை தீர்க்கதரிசி நீக்கிவிடுவார் என்று (2இராஜா.5:3) கூறினாள். தன் அடிமைத்தனத்தை நினைத்து பயந்து கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்கு நேராக நாகமானை வழிநடத்தி அதனிமித்தம் சீரியாவுக்கு இரட்சிப்பு வரக்காரணமானாள். நாகமானின் குஷ்டரோகம் நீங்கி அவன் "...உமது அடியேன் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை" (2இரா.5:17) என்றான். அன்று அந்த அடிமைப்பெண் நாகமானின் வீட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு சென்றாள். இன்று நாம் எப்படியிருக்கிறோம்? சிந்திப்போம். இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம். பிறர் வாழ வாழ்த்துவோம்.

★ **கிறிஸ்துவின் சபையாரின் வாழ்த்து:** புத்தாண்டுக்குள் கால்பதிக்கும் கிறிஸ்துவுக்குள்ளான அன்பு சகோதரிகளே, "கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்" (ரோம.16:16). கிறிஸ்து தாமே தம்முடைய சுயரத்தத்தை சிந்தி சம்பாதித்துக் கொண்ட மந்தையில் ஒரு அங்கமாகி கிறிஸ்துவின் சபையாரோடுகூட நீங்களும் மற்றவர்களை வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துங்கள். அன்று வாழ்த்தினவர்களை மாதிரியாக கொண்டு இன்று நாம் மற்றவர்களை வாழ்த்துவோமாக! கிறிஸ்துவுக்கே மகிமை உண்டாவதாக! ஆமென்.



# உபதேசத்தில் உறுதி

## Doctrinal Soundness

J.C.Choate

இந்தப் பாடத்தை படிக்கும்போது என்னோடு கூட நீங்கள் பிரசங்கியாரைப்பற்றியும், அவருடைய உறுதியான தெளிவான அறிவைப்பற்றியும் சிந்தியுங்கள். நாம் கிறிஸ்துவின் உபதேசத்தைப் பற்றியும், அதற்கு ஒருவர் தன்னை அர்ப்பணிப்பதைப் பற்றியும் பேசுகிறோம்.

மெய்யாகவே வித்தியாசப்பட்ட உபதேசங்களோடும் நடைமுறைகளோடும் அநேக சபைகள் இருக்கின்றன அவர்கள் தங்களுக்கென்று சொந்த பிரசங்கியாரையும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகள் அல்லது இவைகளை குறைவாகவும் கொண்டிருப்பார்கள். மேலும் அநேக மத சம்பந்தப்பட்ட கூட்டங்களுமுண்டு. ஆனால் அவைகளில் ... ஒன்றிலாகிலும் நமக்கு ஆர்வமில்லை. ஆனால் நாம் வேதம் என்ன போதிக்கிறதோ அந்தப் போதனைபடி விசுவாசத்தில் நடப்பதிலும் அதைப் பிறருக்கு அறிவிப்பதிலும் ஆர்வமாக இருக்கிறோம்.

ஒரு பிரசங்கியார் உபதேசத்தில் உறுதியுள்ளவராயிருக்க வேண்டுமானால், அதாவது அவருடைய நம்பிக்கையிலும் வேதம் என்ன போதிக்கிறது என்பதைப் பிரசங்கிப்பதிலும்...உறுதியுள்ளவராயிருக்க வேண்டுமானால், இயல்பாகவே இரட்சிக்கப்படும்படியாக கர்த்தருக்கு அவர் கீழ்ப்படிந்து கிறிஸ்துவின் சபையிலே கிறிஸ்துவானவராலே சேர்க்கப்பட்டவராகிறார் என்பதை விசுவாசிக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தனக்கு தானே செய்துகொள்ளாத ஒன்றை அவர் எப்படி மற்றவர்கள் செய்யும்படி பிரசங்கிக்க முடியும், ஒரு வாடகைப் பிரசங்கியாரே அப்படிச்செய்ய முடியும் ஆனால் வாடகை பிரசங்கியார் வேதத்தின் பார்வையிலே குற்றவாளியாகயிருக்கிறபடியால் கர்த்தருடைய ஜனங்களால் நிராகரிக்கபடவேண்டும்.

அப்படியானால் ஒருபிரசங்கியார் சுவிஷேசத்தைக் கேட்டு அதை விசுவாசித்து தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அல்லது பாவங்கள் மன்னிக்கப்படும்படியாக தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டவராயிருக்கிறார் (மாற்கு 16:15-16; லூக் 13:3; மத் 10:32; அப்2:38). இவைகளைச் செய்த பின்பு வேதத்திலே சொல்லப்பட்டுள்ள கிறிஸ்துவின் ஒரே சபையிலே கர்த்தரே அவரை சேர்க்கிறார் (அப் 2:47; எபே 4:1-6; கொலோ 1:18). இப்பொழுது அவர் கீழ்ப்படிந்து கர்த்தருடைய சபையில் அங்கத்தினராகிவிட்டார். அவர் கிறிஸ்தவராக வாரத்தின் முதல் நாளிலே தேவனைத் தொழுது கொள்ளும்படி ஆயத்தமாக இருந்து கிறிஸ்தவராக ஜீவிக்கிறார்.


ஒரு கிறிஸ்தவராக இந்த மனிதன் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்க தீர்மானிக்கிறார் இந்த வேலைக்கு தேவைப்படுவது என்ன? இதன் அர்த்தம் என்ன

வென்றால் அவர் வேதத்தை போதுமான அளவிற்கு கற்று தன்னைத் தானே ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். அவர் தேவனுடைய வார்த்தையை அறிந்து அவர் சித்தத்தைப் புரிந்து அதோடு எதையும் கூட்டாமலும் அதிலிருந்து எதையும் குறைக்காமலும் அல்லது அதற்கு மாறாக எதையும் சொல்லாமலும் மற்றவர்களுக்கு போதிக்கதக்கதாக புரிந்து செயல்படுபவராக இருக்க வேண்டும் (வெளி 22:18-19; கலா 1:6). கிறிஸ்துவினுடைய உபதேசங்களின்படியும், போதனைகளின்படியும் நடக்க வேண்டும் என்பதன் ஜாக்கிரதையை அவர் உணர்ந்தவராயிருக்க வேண்டும். துவக்க காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றி பின் வருமாறு வாசிக்கிறோம். “அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்” (அப் 2:42). அவர்கள் தொடர்ந்து கடைப்பிடித்த அப்போஸ்தல உபதேசங்கள் கிறிஸ்துவின் போதனைகளே. அப்போஸ்தலனாகிய யோவான் பின்வருமாறு சொல்கிறார். “கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிறஎவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2யோவான் 9). யாக்கோபு சொல்கிறார். “சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவனாயிருப்பான்” (யாக் 1:25). இந்த வேத வாக்கியங்களை நாம் படிக்கும்போது எளிதாகக் காண்பது என்ன வென்றால் ஒரு பிரசங்கியாரோ அல்லது கிறிஸ்தவனோ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால் அவர்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் உபதேசத்திலும் போதனையிலும் நிலைத்திருக்க வேண்டுமென்பதே. மேலும் வேத வாக்கியங்களை போதிப்பதில் ஒருவன் இந்த விதமாக செய்யாவிட்டால் தேவன் அவனோடிருந்து அவனை ஆசீர்வதிக்கமாட்டார் என்பதே.

தீமோத்தேயு, மற்றும் தீத்துவோடு பவுல் பேசும்போது ஆரோக்கியமான உபதேசத்தைக் குறித்தும் ஆரோக்கியமாகப் பேசுவதைக் குறித்தும் மற்றும் பிறவற்றையும் குறிப்பிடுகின்றார். 1 தீமோ1:10-ல் பவுல் கொலை, ஒழுக்கக்கேடு, பொய்ச்சொல்லுதல் ஆகியவற்றை ஆரோக்கியமான உபதேசத்திற்கும் போதனைக்கும் எதிரானது என்று பட்டியலிடுகின்றார் 2தீமோ 1:13-ல் அவர் வலியுறுத்திச் சொல்வது “நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு”.

மறுபடியும் ஆரோக்கியமான போதனை என்றால் அது தேவனிடத்திலிருந்து வரும் போதனையே. தீத்துவுக்கு அவர் போதகனுடையவேலையைச் செய்வது பற்றி பவுல் பின்வருமாறு சொல்கிறார். “அநேகர், விசேஷமாய் விருத்த சேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள்.





# அன்றும் இன்றும்
## Yesterday and Today

*J.Glory Arjunan*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே வாழ்க! ஒருவர் இன்னொருவரை மனதார வாழ்த்தும் போது அது மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். பொதுவாக ஜனங்கள் தங்கள் தங்கள் விசேஷநாட்களில் ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்வர். ஆனால் அவர்களெல்லோரும் தங்கள் மனங்குளிர வாழ்த்துகிறார்களா என்பது கேள்விக்குறியே! காரணம் உண்மையான அன்பு அவர்களிடம் காணப்படுவதில்லை. சிலர், தங்கள் வாயினால் ஆசீர்வதித்து தங்கள் உள்ளத்தில் சபிக்கிறவர்களாயிருக்கிறார்கள். பரிசுத்த வேதாகமம் இவ்வாறான மாய்மாலமான காரியத்தை விரும்புவதில்லை. மாறாக “ஆசீர்வதிக்க வேண்டியதேயல்லாமல் சபியாதிருங்கள்” என்ற கிறிஸ்துவின் வசனத்தைத் தாங்கியே இருக்கிறது. வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தினவர்களின் பட்டியலில் இதோ…

*** தேவதூதனின் வாழ்த்து:** “…கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்” காபிரியேல் என்னும் தேவதூதன் (லூக்.1:28) என்ன அருமையான வார்த்தை இது! ‘வாழ்க’ என்ற ஒரே ஒரு வார்த்தை மரியாளுக்கு தேவகிருபையைக் கொண்டு வந்தது. அன்று வந்த அந்த கிருபையினாலே இன்று நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிருபாசனத்தண்டை சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். அந்த கிருபாசனத்தண்டைக்கு வந்து சேரும்படி இன்று மற்றவர்களை வாழ்க என வாழ்த்தி வரவழைப்போமா?

*** மரியாளின் வாழ்த்து:** தேவதூதனால் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாள், “…எலிசபெத்தை வாழ்த்தினாள்” (லூக்.1:41). இந்த வாழ்த்துதல் எலிசபெத்துக்கு மனமகிழ்ச்சியைக் கொண்டு வந்ததா? ஆம், அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை கூட துள்ளுமளவிற்கு மரியாளின் வாழ்த்துதல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. அதுமாத்திரமல்ல, “…எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்…” என்று மரியாளை நோக்கி கூறி, மேலும், “விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்” (லூக்.1:42-45). பாருங்கள், ஒருவருக்கொருவர் மனதார வாழ்த்தியிருக்கிறார்கள். ஸ்திரீகளாகிய அவர்களிடையே ஸ்திரீகளுக்கேயுரிய பொறாமை குணம் காணப்படவில்லை. ‘அன்புக்குப் பொறாமையில்லை’ (1கொரி.13:4). எனவே அன்று வாழ்த்துதல் சொல்லுவதில் முந்திக்கொண்டாள் மரியாள். இன்று நாம் எப்படியிருக்கிறோம்? சிந்திப்போம்!

*** இயேசுவின் வாழ்த்து:** “…இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார்…” (மத்.28:9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்த

மேலும் உழைப்பு
நிலைமாறிய மதில்கள் மேலெழுந்தன
மரித்தோர் சுடுகாட்டின் மேல்
ஒருசமயம் நம்முடையதாயிருந்த வீட்டினது,
நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன் எப்போதும்
அதாவது இந்த கருவி ஆயத்தமாக்கப்பட்டிருந்தது எப்போதும்
தேவனுடைய கரங்களில் தேவையான சமான்கள் போல்;
இந்த மதில்கள் – இந்த விளக்கு – இந்த ஆசனங்கள்
அனைத்தும் அவருடையவை;
ஆனால், குறுகிய கால கட்டத்திற்கு,
அவைகளைக் கொடுக்கின்றார் அவர் இரவலாக நமக்கு
கண்காணிகளாக,
கவனிக்க அவருக்கென பயன்படுத்த.
நான் சொந்தமாகக் கொள்ளவில்லை சிறிதளவும்
என்னை சொந்தமாக்கிக்கொள்ளவில்லை ஒருபொருளும்

***-Betty***

## பெலன் – Strength

- A.Kanagaraj

இன்றைக்கு அநேகர் பெரிய காரியங்களை செய்து முடிக்கின்றனர். அதற்கு காரணம் அவர்களுடைய பராக்கிரமமோ, பணமோ, பதவியோ அல்ல. கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த பெலன் . ஒரு வாலிபன் பெலன் அற்று படுக்கையில் வியாதியாய் இருந்தான். அவனைப் பார்த்து ஊர் மக்கள் கேட்கின்றனர் இவன் என்ன ஆட்டம் போட்டான் தெரியுமா? என்று ஆனால் நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து அவனுக்காக பரிதவித்து கிருபை அளிக்கிறார். பாவத்திலும், வியாதியிலும் இருந்து இரட்சித்து காக்கிறார். "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்; நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிக பெலனுள்ளதாயிருக்கிறது" (யாக்.5:16). அப்போஸ்தலனாகிய பவுல் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" (ரோம.1:16). இயேசுவை விசுவாசிக்கிறவர்களுக்கு அது தேவ பெலனாயிருப்பது கிறிஸ்துவின் சுவிசேஷம். பெலனற்ற நமக்கு பெலத்தை கொடுத்தவர் கிறிஸ்து. "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" (பிலி.4:13). நமக்கும் கிறிஸ்து பெலனாயிருக்கிறார்.



கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர், துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான். இந்த சாட்சி உண்மையாயிருக்கிறது; இது முகாந்தரமாக, அவர்கள் யூதருடைய கட்டுக்கதைகளுக்கும், சத்தியத்தை விட்டு விலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்கும் செவிகொடாமல். விசுவாசத்திலே ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி, நீ அவர்களைக் கண்டிப்பாய் கடித்துகொள். சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப் படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களு மாயிருக்கிறார்கள்" (தீத்து 1:10-16).

பவுல் தொடர்ந்து சொல்வது "ஆரோக்கியமான உபதேசத்துக்கு ஏற்றவைகளைப் பேசு" (தீத்து 2:1). முதிர்வயதுள்ள புருஷர்களுக்கும் முதிர் வயதுள்ள ஸ்திரீகளுக்கும் வாலிப ஸ்திரீகளுக்கும், இளைஞனுக்கும் அவர்களுடைய கடமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி எப்படி போதிக்க வேண்டுமென்று தீத்துவுக்கு ஆலோசனை சொன்னபின்பு அதைப் பின்வருமாறு சொல்லி நிறைவு செய்கிறார்...(தீத்து 2:8). மேலும் அவர் சொல்லுகிற புத்திமதி பின்வருமாறு "தங்கள் எஜமான்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து எதிர்த்துப்பேசாமல், எல்லாவற்றிலும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் புத்திசொல்லு, ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள் ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக" (தீத்து 2:10-15).

மேலும் 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து மற்றும் இது போன்ற மற்ற நிருபங்களில் நாம் தொடர்ந்து ஆரோக்கியமான உபதேசத்தில் விசுவாசமாயிருப்பதிலும் வார்த்தையிலும் நன்னடைத்தையிலும், மற்றவர்களோடு பழகுவதிலும், மேலும் போதிப்பதிலும் பிரசங்கிப்பதிலும் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் குறித்து வாசிக்கலாம்.

ஆகவே பிரசங்கியார்கள் மற்றவர்களுக்கு போதிக்கும்படியான நல்ல வேலையை செய்யும்படியாக வேதத்தை நன்கு படித்து அது என்ன போதிக்கிறது என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். பழைய ஏற்பாட்டிலும்,

யூதர்களுடைய சரித்திரத்திலும் பிரமாணங்களுக்கு இடையில் உள்ள வித்தியாசங்கள், பழைய ஏற்பாட்டு சட்டம் ஏன் நடைமுறையில் இல்லை மேலும் புதிய ஏற்பாட்டு சட்டம் இன்றைக்கு மனிதர்களை கட்டுப்படுத்துவதாக ஏன் இருக்கிறது என்பதிலும் ஒருவர் நன்கு கற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (எபி 9-10 அதிகாரம்). பிரசங்கியார் சுவிசேஷத்தைக் குறித்தும், இரட்சிப்பின் திட்டத்தைக் குறித்தும் அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள மன மாற்றங்களைக் குறித்தும் மேலும் கர்த்தருடைய சபை மற்றும் அதனுடைய அமைப்பு ஆகியவற்றைக் குறித்தும் நன்கு புரிந்தவராக இருக்க வேண்டும் (1கொரிந் 15:1-4;மாற்கு 16:15-16; எபே 5 அதிகாரம்).

மேலும் ஒரு பிரசங்கியார் வேதத்தினுடைய உண்மையையும் போதிக்கும்படியாக வேதத்திலே கண்டிப்பாகக் கற்று தேர்ச்சி பெற வேண்டிய அநேகமுண்டு. அதே சமயத்தில் அவர் கள்ள போதனையைக் குறித்து எச்சரிக்கையுள்ளவராக அதை அன்போடும் உறுதியோடும் கண்டிப்பாக எதிர்க்க வேண்டும்.

வானொலி நேயரின் கடிதம்

## சென்னையிலிருந்து...



கர்த்தருக்குப் பிரியமான சகோதரர் அவர்களுக்கு தாமஸ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. தங்களுடன் செல் போனில் பேசியது குறித்து மிக்க மகிழ்ச்சி.

ஐயா, தங்கள் ஆவிக்குரிய செய்திகளை வாரந்தோறும் சனிக்கிழமை இலங்கை ஆசிய சேவை மூலம் 5.30 மணிக்கு தவறாமல் கேட்டுப் பயன் அடைவேன். தாங்கள் கொடுக்கும் செய்திகள் இயல்பாக இருப்பதால் எனக்கு மிகவும் பிடிக்கும்.

மின்சப்பளை ஒருவேளை இல்லாமல் போய்விட்டால் ரேடியோவை மின் சப்பளை இருக்கும் பகுதிக்கு எடுத்துச் சென்று தவறாமல் கேட்டு மகிழுவேன். சத்தியத்தை வழி விலகாமல் சத்தியமாக சொல்வதால் தங்கள் தேவ செய்தி பரிசுத்த ஆவியின் செய்தியாக உள்ளது. தங்களுக்கு இப்படிப்பட்ட வல்லமையைக் கொடுத்த தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

சத்திய வழி P.R.சாமி அவர்களைச் சார்ந்து தங்கள் நிகழ்ச்சி தொகுப்புகள் இருப்பதால் மிகவும் மகிழ்ச்சி. ஐயா தாங்கள் சென்னை வந்தால் நான் நேரில் வந்து உங்களை சந்திக்கிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் மறுபடியும் தொடர்பு கொள்கிறேன்.

அன்புடன்,
R.T.தாமஸ்

நடப்புச் செய்திகள்

- நுகர்வோரை ஏமாற்றும் வகையில் செயல்படும் வியாபாரிகளுக்கு 6 மாத சிறை தண்டனை விதிக்கப்படும் என தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.
- நாட்டின் வட மாநிலங்களில் குளிர் அதிகமாக இருப்பதால் அங்கு மாரடைப்பு, இதய நோய் பிரச்சனைகள் அதிகரித்துள்ளன.
- வரும் 2015 - 16-ம் கல்வியாண்டில், எஸ்.எஸ்.எல்.சி., எனப்படும் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு முப்பருவ கல்வி முறையை அமல்படுத்த, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.
- கிரிக்கெட்டை பொறுத்தவரை இலங்கைக்கு எதிரான கோல்கட்டாவில் நடந்த ஒருநாள் போட்டியில் இந்தியாவின் ரோகித் சர்மா 264 ரன்கள் எடுத்து உலக சாதனை படைத்தார்.



பெண்கள் பகுதி

## காட்சி – Perspective

இருபது ஆண்டுகளுக்கு முன் வீடு ஒன்றினை நாம் கனா கண்டோம்.
ஆண்டுகளெல்லாம் பேச்சு,
திட்டம்,
மாதங்களெல்லாம் வியர்வையும் உழைப்பும்
கனவை மாற்றின
முழுமையான உண்மை நிலைக்கு
மதிலோடும், சன்னல்களோடும், தளங்களோடும் கதவுகளோடும்.
நமது வீடு .....
ஆனால் நாம் தாராளமாக கடனாய்கொடுத்தோம் நமது வீட்டை தேவனுக்கு
அவ்வாண்டுகளெல்லாம், சொந்தக்காரரின் சந்தோஷம் இனிமையாயிருந்தது
அப்புறம் திகில்:
தீ! தீ!
ஜீவாலைகள், தாவின, நக்கின, டமார் சப்தம்,
நமது வீட்டை விழுங்கியது
நமது பொருட்கள்,
நமது வாழ்வு –
அளவில் ஒரு அரக்கன் யாராலும் நிறுத்த முடியல:
எல்லாம் – எல்லாம் நம்மால் அன்பு கூரப்பட்ட பொருட்கள், எல்லாம்
நம்மால் அறிப்பட்டவை மேலும் சொந்தமானவை
அவைகள் நம்முடையதல்ல கொஞ்சமும் இனி;
பூரண பயம் திகில் நிரப்பிற்று என் இருதயத்தை
அதன்பின், முடிவில், ஏற்றுக்கொள்ளல்:
மூர்க்கமான தீ எரித்துபோட்டது எனது உலகத்தை
கொடூர தோல்வியின் பயங்கரமான அந்நேரத்தில்
அனுமதித்தேன் அது கடந்து செல்ல.
இப்போ, எப்பேர்பட்ட புதுமையான உணர்வு என் இருதயத்தில்
நான் வண்ணம்பூசி மெருகேற்றியது போல்,
தீர்மானங்கள் உருவாகி, அளவு குறைந்து,